மாகக் கொண்டும் அமைக்கலாமா என்றும் அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. முடிந்த முடிவு எடுக்காத காரணத்தாலே தான் யோசனையிலே இருக்கிறது என்று தெரிவித்தேன். விரைவில், என்னுடைய மானியக் கோரிக்கையில் அதை முடித்து விடலாம் என்று நான் கருதிக் கொண்டிருக்கிறேன்.

தேசிய நெடுஞ்சாலைகளை அபிவிருத்தி செய்தல்

*7965 திருமதி எஸ். பி. சற்குணம் :
மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) உலக வங்கியின் உதவியுடன் தேசிய நெடுஞ்சாலைகளை அபிவிருத்தி செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : உலக வங்கி உதவியுடன் தேசிய நெடுஞ்சாலைகளை அபிவிருத்தி செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. அதன் அடிப்படையில் ஏற்கெனவே தேசிய நெடுஞ்சாலை 45-ல் தாம்பரம் முதல் விழுப்புரம் வரையிலான சாலை உலக வங்கி உதவியுடன், அந்த சாலையைப் பலப்படுத்துகிற, அகலப்படுத்துகிற காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

திருமதி எஸ். பி. சற்குணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கி உதவியுடன் என்.எச். 45 திட்டம் தாம்பரத்திலிருந்து விழுப்புரம் வரை அமல்படுத்தப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார். அதில் எத்தனை பேக்கேஜுகள் போடப்பட்டிருக்கின்றன, யார் யார் மூலம் அந்த திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது, திட்டச் செலவு எவ்வளவு என்பதனையும், உலக வங்கி நிறுவனத்தைத் தவிர்த்து, வேறு உலக நிறுவனங்கள் ஏதேனும் இந்தத் திட்டத்திற்கு நிதி உதவி அளிக்க முன் வந்திருக்கின்றனவா, அப்படி எந்தெந்த நிறுவனங்கள், எவ்வளவு நிதி அளிக்க முன் வந்திருக்கின்றன என்பதையும் அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரத்திலேயிருந்து விழுப்புரம் வரையிலே இருக்கிற தேசிய நெடுஞ்சாலை என். எச். 45-ஐ, விழுப்புரம் டூ தாம்பரம் வரையிலுள்ள அந்தப் பகுதியை அகலப்படுத்தவும்

1990 ஏப்ரல் 16]

பலப்படுத்துவதற்காகவும், உலக வங்கி உதவ முன் வந்திருக்கிறது. நமக்கு மட்டுமல்ல, பஞ்சாப், ஹரியானா, மேற்கு வங்கம், குஜராத், உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களுக்கும் உதவ முன் வந்திருக்கிறது. இதிலே நாம் மட்டும் தான் அந்த வேலையை எடுத்துச் செய்திருக்கிறோம். இதனுடைய மதிப்பீடு 1986 ஆம் ஆண்டு 54.20 கோடியாகும். பிறகு அதனுடைய ரிவைஸ்டு எஸ்டிமேட், திருத்திய மதிப்பீடு, 1989-ல் ரூ. 72.29 கோடியாக உயர்ந்திருக்கிறது. எத்தனை பேக்கேஜுகளாக பிரித்து இருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். 6 பேக்கேஜுகளாகப் பிரித்து இருக்கிறார்கள். அதாவது பேக்கேஜ் 1, இது தாம்பரம் மேம்பாலம் முதல் பரனூர் வரையில் உள்ள ஒரு பகுதியாகும். 26 கிலோ மீட்டர். இதற்கு ரூ. 19.80 கோடி மதிப்பீடு, இது 2 லைனை 4 லைனாக மாற்றுவது. அடுத்து, பேக்கேஜ் 2, பரனூரிலிருந்து புக்கத்துறை வரையிலுள்ளது. இதனுடைய மதிப்பீடு ரூ. 14.14 கோடி. 12.4 கிலோ மீட்டர் தூரம், இதுவும் 2 லேன், 4 லேனாக மாற்றுவது. இது இரண்டையும் யார் செய்வது என்று கேட்டார்கள். ஆப்கான்பாலி ஜாயின்ட் வென்சர்ஸ் என்ற கம்பெனி செய்கிறது. அடுத்து, பேக்கேஜ் 3, இது பாலாறு மீது கட்டப்பட்டுள்ள ஒரு பாலமாகும். இதை உத்தரப் பிரதேசம் கன்ஸ்ட்ரக்ஷன் கார்ப்பரேஷன் கட்டியிருக்கிறது. இதனுடைய மதிப்பீடு 3.72 கோடியாகும். அடுத்து பேக்கேஜ் 4, இது தாம்பரம், பரனூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், இருப்புப் பாதை மீது கட்டப்படுகிற மேம்பாலம், இந்த மூன்று பாலங்களைக் கொண்ட ஒரு பகுதியாகும். இதனுடைய மதிப்பீடு 3.23 கோடியாகும். இந்த வேலையை ரெயில்வே இலாக்கா செய்கிறது. அடுத்து, பேக்கேஜ் 5, இது புக்கத்துறையிலிருந்து தென்னாற்காடு மாவட்ட எல்லை வரை உள்ளது. 37 கிலோ மீட்டர்; மதிப்பீடு 12.4 கோடி ரூபாயாகும். இது தார்ச் சாலையைப் பலப்படுத்துவது மட்டும் ஆகும். பேக்கேஜ் 6, மாவட்ட எல்லை முதல் விழுப்புரம் வரையில், 56 கிலோ மீட்டர் தூரம், 14.9 கோடி ரூபாய். இந்த இரண்டு வேலைகளையும் அட்லாண்டா கம்பெனி செய்கிறது. அதையடுத்து இன்னொரு கேள்வி சேர்த்துக் கேட்டார்கள். இந்த உலக வங்கி நிறுவனம் தவிர, வேறு ஏதாவது உலகத்திலே இருக்கின்ற நிறுவனங்கள் சாலையை மேம்படுத்துவதற்காகப் பண உதவி செய்கிறதா என்று கேட்டிருக்கிறார்கள். கிழக்கு கடற்கரைச் சாலையை அதாவது 'ஈஸ்ட் கோஸ்ட் ரோடு' என்பதை மேம்படுத்த 53 கோடி ரூபாய் அளவுக்கு ஆசியாவில் இருக்கிற அபிவிருத்தித் திட்டத்தின் மூலமாக அதாவது ஏ.டீ.பி. தந்திருக்கிறது. அது மட்டுமல்லாமல் கிருஷ்ணகிரியிலிருந்து ஹோசூர் வரை அதாவது கர்நாடக எல்லை வரையில் இருக்கிற அந்தச் சாலையை மேம்படுத்துவதற்கும் ஏ.டீ.பி உதவி செய்ய முன் வந்திருக்கிறது. மதுரை, திண்டுக்கல்லில் கிலோ மீட்டர் 7-லிருந்து அதாவது 374/5 முதல் 436/0 வரையில் உள்ள அந்தப் பகுதியை மேம்பாடு செய்யவும் ஏ.டீ.பி.

முன் வந்திருக்கிறது. அதே போன்று சென்னையில் இருந்து ராணிப்பேட்டை வரையில் இருக்கிற அந்தச் சாலையை நான்கு லேனாக மாற்றுவதற்கு இன்வெஸ்ட்டிகேட் செய்ய ஏ.டீ.பி. முன் வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

9–50 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி சற்குணம் அவர்களுக்கு இனிமேலும் விடை ஏதும் தேவைப்படுமா ?

திருமதி எஸ். பி. சற்குணம் : பேரவைத் தலைவர் அவர்களே, இதுவே போதுமானது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோருக்குமே இது போதுமானது.

இராமப்புற சாலைப் பிரிவையும், நெடுஞ்சாலைப் பிரிவையும் இணைக்கும் திட்டம்.

*7966 டாக்டர் க. காஞ்சனா :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கிராமப்புற சாலைப் பிரிவையும், நெடுஞ்சாலைப் பிரிவையும் இணைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித் துறையில் தற்போதுள்ள 6 தலைமைப் பொறியாளர்களின் பணி அமைப்பினை சீர்திருத்தி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது.

டாக்டர் க. காஞ்சனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நெடுஞ்சாலைப் பிரிவையும், கிராமப்புற சாலைப் பிரிவையும் பொறுத்த வரையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல 6 சி.இ.-க்கள் இருக்கிறார்கள். Highways–Rural Works; R.R.–C.E.– National Highways; N. H. 45 C. E.; Tamil Nadu Urban Development Project C.E; Highways Research Station C. E. இப்படியாக அறுவர் இருக்கிறார்கள். ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினர்களாகட்டும், பொதுமக்களாகட்டும், மற்றவர்கள் ஆகட்டும், இந்த அதிகாரிகளை அணுகுகிற போது இந்த சி.இ.